Registered as a Newspaper

88 August
விஞ்ஞானப் பிரிவு
வகுப்புக்கள்
பிரிவு II
விரைவில் ஆரம்பம்
விண்ணப்பங்கள்
ஏற்கப்படுகின்றன.
விபரங்களுக்கு:
New Master
Institute
B.M.C. Lane, JAFFNA

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடுநிலைமை

விலை ரூ-1/=

Physics: திரு. வர்ணம்
Chemistry: திரு. தில்லைநாதன்
Botany: திரு. குகாதரன்
Zoology: திரு. நாகநாதன்
Pure & Applied Maths: திரு. நல்லையா
விபரங்களுக்கு:
New Master Institute
B.M.C. Lane, JAFFNA.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஆடு மாசி மீ 6 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1406 ஜமா. ஆகிர் பிறை 8 (18-02 1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:79

# குச்சவெளியில் இரு நாட்களாக இடைவிடா சமர்

## ஹெலிக்கொப்டர் சேதம்; தரை இறக்கப்பட்டது

—திருமலை மாவட்டச் செய்தியாளரும், அலுவலகச் செய்தியாளரும்—

திருகோணமலை, பெப். 18

குச்சவெளிப் பகுதியில் அரசாங்கப் படையினருக்கும் போராளிகளுக்கும் இடையில் கடந்த இரண்டு நாட்களாக இடைவிடாத பெருஞ் சமர் நடைபெற்றுக்கொண்டிருந்தது.

படையினருக்குச் சொந்தமான ஹெலிக்கொப்டர் ஒன்றைப் போராளிகள் சுட்டதில், அது சேதமடைந்தது.

சேதமடைந்த ஹெலிக்கொப்டர் தரை இறக்கப்பட்ட பின்னர் படையினர் பீரங்கித் தாக்குதல் நடத்தியதாகச் சொல்லப்படுகிறது. போராளிகளும் சளைக்காது இச் செய்தி எழுதப்படும்போது போராடிக்கொண்டிருந்ததாக அறிவிக்கப்பட்டது.

இம்மோதல் தொடங்கிய முதல் நாளான ஞாயிற்றுக்கிழமை மாலை ஹெலிக்கொப்டர் ஒன்று மீது போராளிகள் சுட்டதாகவும் அதனால் ஹெலிக்கொப்டர் சேதமடைந்தது என்றும் கூறப்படுகிறது.

சேதமடைந்த ஹெலிக்கொப்டர் அருகில் இருந்த இடம் ஒன்றில் இறங்கியதாகவும் தெரிய வந்தது.

இதைத் தொடர்ந்து இரு தரப்பும் கடும் மோதலில் ஈடுபட்டனவாம்.

முதல் நாள் மோதலைத் தொடர்ந்து நேற்று அப்பகுதிக்கு மேலதிக ஆயுதப்படைகள் அனுப்பப்பட்டன.

பத்துக்கும் அதிகமான வாகனங்களில் கடற்படையினரும் ஆறுக்கும் அதிகமான வாகனங்களில் இராணுவத்தினரும் அப்பகுதிக்கு அனுப்பப்பட்டனர்.

சமர் நடக்கும் இடத்திற்கு முப்படைகள் உடனடியாக விமானமூலமும் அனுப்பப்பட்டன. பின்னர் வந்த மூன்று ஹெலிக்கொப்டர்களும் ஒரு சிறு விமானமும் அவ்விடத்தில் குண்டுமாரி பொழிந்தன.

போராளிகள் விமானங்களை நோக்கி றொக்கெட் லோஞ்சர் மூலம் தாக்குதலை நடத்திக் கொண்டிருந்தனர்.

ஆயுதப் படையினர் பீரங்கி வண்டிகளில் இருந்தும் சரமாரியாகக் குண்டு பொழிந்து தாக்குதல் நடத்தினர். போராளிகளும் சளைக்காது எதிர்த்தாக்குதல் நடத்தினர் என்று அறிவிக்கப்படுகிறது.



முச்சந்திமுரளி

யாழ்ப்பாணத்திலை இப்ப எல்லாம் புதுக்கப் புதுக்கத்தானே பாக்கிறோம். பீரங்கி, விமானம், குண்டு அப்பிடி இப்பிடி எண்டு அதுகளிலை உந்தப் பிழம்பும் ஒரு புதுமை ரகமோ பின்னை....!

# பிரிட்டிஷ் பெண் இன்னும் விடுதலை இல்லை

யாழ்ப்பாணம், பெப். 18

'ஈரோஸ்' இயக்கத்தினரால் கடத்தப்பட்ட பிரிட்டிஷ் பெண் திருமதி. வில்லிஸ் பெனிலோப் நேற்று நள்ளிரவு 12 மணி வரை விடுவிக்கப்படவில்லை.

அவரைக் கையேற்கவென வந்திருந்த செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி செல்வி சன்ட்ரா சிங்கரும், இலங்கையில் உள்ள பிரிட்டிஷ் தூதரக அதிகாரி திரு. மக்கின் ரொட்டும் ஹோட்டல் அசோக்கில் கண்விழித்துக் காத்திருந்தனர்.

இரவு சுமார் 8.30 மணியளவில் ஹோட்டலுக்கு வந்த அவர்கள் இருவரையும் சில இளைஞர்கள் சந்தித்தனர் என்றும் – செல்வி சிங்கரை சில இடங்களைப் பார்வையிட வருமாறு அழைத்ததாகவும்–

திருமதி பெனிலோப்பை கையேற்கும் பொறுப்பு மட்டுமே தமது தலைமையகத்தால் கொடுக்கப்பட்டது என்றும், எந்த இடத்தையும் சென்று பார்க்கத் தமக்கு உரிமை இல்லை என்றும் செல்வி சிங்கர் தெரிவித்ததாகவும் —

அப்படியானால் இன்று இரவு திருமதி பெனிலோப் விடுதலை செய்யப்படமாட்டார் என்று

(4–ஆம் பக்கம் பார்க்க)

### குண்டு வெடிப்பு சத்தங்கள்

யாழ்ப்பாணம், பெப். 18

ஞாயிறு இரவில் இருந்து நள்ளிரவு வரை தொடர்ச்சியாக வவுனியா இராணுவ முகாமில் குண்டு வெடிப்புச் சத்தங்களும் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் கேட்ட வண்ணம் இருந்தன

இதுபற்றி கொழும்பில் இராணுவ உயர் அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது, தீவிரவாதிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களே வெடிக்கவைத்துப் பரீட்சிக்கப்பட்டன என்று தெரிவித்தார்.

### யாழ் மாவட்ட பொலீஸ் அதிபர்

யாழ்ப்பாணம், பெப். 18

யாழ் மாவட்ட பொலீஸ் அதிபராக திரு உடுகம்பொல நேற்றுப் பதவி ஏற்றார்.

அதன் பின்னர் பொலீஸ் அதிகாரிகளுடன் மாநாடு ஒன்றை அவர் நடத்தினார்.

## யாழ் நகரில் இரவில் வேகமாகப் பாயும் மர்ம ஒளிப்பிழம்பு

யாழ்ப்பாணம், பெப். 18

யாழ்ப்பாண நகரின் வடக்குப் பக்கத்திலிருந்து தெற்குத் திசை நோக்கி வேகமாகக் கடந்து செல்லும் மிகப் பிரகாசமான வெளிச்சம் என்ன?

இந்த மர்மம் புரியாமல் நல்லூர்ப் பகுதியை அண்டி வாழும் மக்கள் அங்கலாய்க்கிறார்கள்.

கடந்த இரண்டு மூன்று தினங்களாக இரவு நேரத்தில் 7.30 மணிக்கும் 8.00மணிக்கும் இடையில் இந்த மர்ம ஒளிப்பிழம்பு வானத்தைக் கிழித்துக்கொண்டு ஏவுகணை வேகத்தில் கடந்து செல்கிறதாம்.

நேற்றிரவும் சுமார் 7.55 மணியளவில் அந்த மர்மப் பிரகாச ஒளி கடந்து சென்றதை சுமார் 20 பேர் கூடி நின்று பார்த்தார்கள்.

அவர்களில் வால் வெள்ளிகளைப் பல முறை பார்த்த அனுபவம் உள்ள ஒருவர் "இரவு பார்த்த வேகப் பிரகாசம் நிச்சயமாக வால் வெள்ளியாக இருக்க முடியாது" என்று அடித்துக் கூறினார்.

தினமும் ஒரே வழி எடுத்துச் செல்லும் இந்த மர்ம ஒளிப் பிழம்பு சுமார் ஒன்றரை நிமிட நேரத்தில் கண்தொலைவில் இருந்து மறைந்து விடுகிறது.

அந்த மர்ம நீள ஒளிப் பிழம்பு என்ன? எங்கிருந்து ஏவப்படுகிறது? நல்லூர்வாழ் மக்கள் பலர் கேட்கும் கேள்விகள் இவை.

## மன்னாரில் கைதானோரில் 11 பேர் நேற்று விடுதலை

யாழ்ப்பாணம், பெப் 18

மன்னாரில் சில தினங்களுக்கு முன் கைது செய்யப்பட்ட 40 பேரில் நேற்றுக்காலை 11 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

மன்னார் செயலகத்தில் அரச அதிபரிடம் ஆயுதப் படையினர் இவர்களைக் கையளித்தனர் விடுவிக்கப்பட்டவர்களில் மூவர் அரச ஊழியர்கள் ஆவர்.

கூட்டணிக்கு இன்று தகவல் தெரிவிக்கப்படும்

# வடக்கு - கிழக்கு இணைப்பு; வெளிப்படையாக ஆதரவு

## தெரிவிக்க முஸ்லிம்கள் தயார்

கொழும்பு, பெப். 18

வடக்கு-கிழக்கு இணைப்பை வெளிப்படையாக ஆதரிக்க கிழக்கிலங்கை முஸ்லிம் மக்கள் தயாராக உள்ளனர்.

இதனை கிழக்கிலங்கை முஸ்லிம் தூதுக்குழு ஒன்று சென்னையில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களிடம் தொலைபேசி மூலம் இன்று அறிவிக்க இருக்கிறது.

பிரஸ்தாப தூதுக்குழு நேற்றுக் காலை கொழும்

(4–ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் துப்பாக்கிப் பிரயோகம்

கிளிநொச்சி, பெப்.18

ஞாயிறு காலை கிளிநொச்சி முகாமிலிருந்து ஏழு கவச வாகனங்களில் புளியம்பொக்கணை, பரந்தன், முரசுமோட்டைப் பகுதிக்குச் சென்ற இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இருவர் காயமடைந்தனர். கடை ஒன்றுக்கு தீ வைக்கப்பட்டது. சுமார் 10 பேர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கிளிநொச்சி முகாமுக்கு கொண்டுவரப்பட்டனர். காயமடைந்தவர்கள் கிளிநொச்சி அரசினர் வைத்திய சாலைக்கு கொண்டுவரப்பட்டு அங்கிருந்து அம்புலன்ஸ்மூலம் யாழ் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

மற்றும் க. நாகராசா என்ற நெல்லியடியைச் சேர்ந்தவரும் க. குலேந்திரன் என்ற கொடிகாமத்தைச் சேர்ந்தவரும் துப்பாக்கிச் சத்தம் கேட்டு ஓடும்போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானர்.

கு நாகராசா என்பவரை இராணுவத்தினர் கனரக வாகனத்தில்ஏற்றி முகாமுக்குக் கொண்டு வந்து விசாரித்த பின்பே வைத்தியசாலையில் சேர்த்தனர்.

## பஸ்ஸிலிருந்து பாய்ந்த இளைஞர் சுட்டுக் கொலை

மட்டக்களப்பு, பெப் 18

பஸ்ஸில் இருந்து பாய்ந்து தப்பி ஓட முயன்றார் என்று கூறப்படும் இளைஞர் ஒருவர் சிப்பாய்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மட்டக்களப்பு ஆயித்தியமலைச் சந்தியில் இந்தச் சம்பவம் நடந்தது.

உன்னிச்சையில் இருந்து மட்டக்களப்பு நோக்கி வந்தபஸ் ஆயித்தியமலைச் சந்தியை அடைந்தபோது எதிரே சிப்பாய்கள் வந்து கொண்டிருந்தனராம்.

சிப்பாய்களைக் கண்ட பிரஸ்தாப இளைஞர் பஸ்ஸில் இருந்து பாய்ந்து தப்பி ஓட முயன்றார் என்று கூறப்படுகிறது.

சுட்டுக்கொல்லப்பட்ட இவர் அடையாளம் காணப்படவில்லை.

## ஹட்டனில் மட்டும் ரூ. 3 கோடி நாசம்

கொழும்பு, பெப். 18

அண்மையில் மலையகத்தில் இடம்பெற்ற வன்செயல்களின்போது ஹட்டன் நகரில் மட்டும் 3 கோடி ரூபா பெறுமதியானச் சொத்துக்கள் நாசம் அடைந்தன.

ஹட்டன் நகரில் மட்டும் 405 வன்செயல்கள் இடம் பெற்றன என்று பொலீஸாரிடம் முறையிடப்பட்டது.

கொலை, கொள்ளை, வீடு எரிப்புச் சம்பவங்கள் இவற்றில் அடங்குகின்றன.

இதனிடையில் ஹட்டனில் இருந்து கொழும்புக்கு இ போ. ச. பஸ்ஸில் வந்துகொண்டிருந்த மலையகத் தமிழர் ஒருவர் இடைவழியில் இறக்கப்பட்டுத் தாக்கப்பட்டார். அப்பயணியிடம் இருந்த பணமும் பொருளும் அபகரிக்கப்பட்டன.

# சமஷ்டியோ, ஈழமோ கொடுக்க முடியாது

## ஐ. தே. க. மாநாட்டில் ஜே. ஆர்

கொழும்பு, பெப். 18

சமஷ்டியோ ஈழமோ வழங்க முடியாது.

மாவட்டசபை, உள்ளூராட்சி மன்றங்களுக்குக் கூடுதல் அதிகாரம் வழங்கப்படும்.

தீவிரவாதிகளும் இந்த அமைப்புக்களில் பங்கு பற்றி எம்முடன் சேர்ந்து நாட்டை ஆளலாம்.

இப்படிச் சொன்னார் ஜனாதிபதி ஜெயவர்த்தனா.

கெக்கிராவையில் ஞாயிறு ஐ. தே. க. உறுப்பினர் மாநாட்டில் திரு. ஜெயவர்த்தனா பேசினார்.

அச்சமயமே இத் தகவலை வெளியிட்டார்.

திரு. ஜெயவர்த்தனா மேலும் சொன்னதாவது:

தீவிரவாதிகள் சுடுகிறார்கள். இராணுவம் திருப்பிச் சுடுகிறது. இரு பக்கத்திலும் மரணங்கள் ஏற்படுகின்றன.

தீவிரவாதிகள் சுடும்போது இராணுவம் சும்மா இருக்க வேண்டுமா?

உலகில் வேறு நாடுகளிலும் தீவிரவாதத்தை அடக்க இப்படித்தான் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

நமது அரசியல் தீர்வை

(4–ஆம் பக்கம் பார்க்க)

# இயக்கச்சி பகுதியிலிருந்து மக்கள் வெளியேறினர்

தாளையடி, பெப். 18

ஞாயிற்றுக்கிழமை. அதிகாலை குறிஞ்சாத்திவில் நடைபெற்ற சம்பவத்தை அடுத்து இயக்கச்சி பகுதி மக்கள் பலர் பீதியினால் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறினர். அயல் கிராமங்களில் அவர்கள் தஞ்சமடைந்தனர்.

இயக்கச்சி சந்தியிலுள்ள கடைகள் மூடப்பட்டிருந்தன.

பாடசாலைக்கும் மாணவர்கள் நேற்று வரவில்லை. கண்டி பிரதான வீதியில் போக்குவரத்துக்கள் நடைபெறுததினால் ஆசிரியர்களும் சமுகமளிக்கக் கூடியதாக இருக்கவில்லை.

குறிஞ்சாத்தீவு சம்பவத்தை அடுத்து ஞாயிற்றுக்கிழமை நண்பகல் வரை 3 விமானங்களும் ஹெலிக்கொப்டர்களும் இயக்கச்சியிலும் இயக்கச்சி தொடக்கம் சாவகச்சேரி வரையுமுள்ள பிரதான வீதியிலும் குண்டுகளை வீசிய வண்ணம் இருந்தன.

இதற்கிடையில் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மன்னாரிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த யாழ் டிப்போவைச் சேர்ந்த பஸ் ஒன்று நேற்றுக் காலையே யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது.

இந்த பஸ் பரந்தன் இரசாயனப் பொருள்கள் தொழிற்சாலையில் பிரயாணிகளுடன் தங்கி நின்றது.

எதுவித அசம்பாவிதமுமின்றி இந்த பஸ் நேற்று யாழ்ப்பாணத்தை வந்து சேர்ந்தது

கொழும்பிலிருந்து வந்து கிளிநொச்சி, பரந்தன் ஆகிய இடங்களில் ஞாயிற்றுக்கிழமை தங்கி நின்ற லொறிகளும் நேற்றே யாழ்ப்பாணத்தை வந்தடைந்தன.

இ.போ.ச.பஸ் சேவைகளும், தனியார் பஸ் சேவைகளும் கொடிகாமம், டவை வரையுமே நேற்று நடத்தப்பட்டன.

### சுபநேரம்

18.2.1986

செவ்வாய்க்கிழமை

சுபநேரம்:
11.02 முதல் 12 32வரை
ராகுகாலம்:
3.32 முதல் 5.02 வரை
இலை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
நவமி பி. ப. 5 20 வரை

## கடற்படையினர் கண்ணிவெடியை அகற்றினர்

### காரைநகரில் பதற்றம்

நல்லூர், பெப் 18

காரைநகர் பாலாவோடைரோட்டில் புதைத்து வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் கண்ணிவெடி ஒன்றை கடற்படையினர் நேற்று முன்தினம் நள்ளிரவு மீட்டெடுத்தனர்

நடைபவனியாகவும், இரண்டு வாகனங்களிலும் கடற்படையினர் பாலாவோடை சென்றனர்.

பின்னர் வந்த வழியே இவர்கள் திரும்பி முகாமை நோக்கிச் செல்லும்போது வானத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதனால் இப்பகுதிகளில் பெரும் பதற்றம் நிலவியது.

## தத்துவமேதை கிருஷ்ணமூர்த்தி காலமானார்

நியுயோர்க், பெப். 17

உலகப் பிரசித்தி பெற்ற தத்துவ மேதை திரு. ஜே. கிருஷ்ணமூர்த்தி காலமானார். அவருக்கு வயது 90.

இந்தியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு கிருஷ்ணமூர்த்தி அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியாவில் வாழ்ந்து வந்தார்.

சில நாட்களாக இவர் சுகயீனமுற்றிருந்தார். இவர் கட்டைப் பிரமச்சாரி.

தற்காலத்திய மிகப் பிரபலமான உலகப் பிரசித்திபெற்ற தத்துவமேதை எனப் புகழ் பெற்றவர் இவர். உலக தத்துவ மேதை பேர்ட்ரண்ட் ரசலுக்கு அடுத்து பிரபல்யமானவராக திரு. கிருஷ்ணமூர்த்தி விளங்கினார்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க தளங்கள் பற்றி விவாதிக்கலாம்

## ஆயத்தமாகஇருப்பதாக மார்க்கோஸ் அறிவிப்பு

மணிலா, பெப். 17
பிலிப்பீன்ஸில் அமெரிக்க தளங்கள் பற்றி அமெரிக்காவுடன் எமது உடன்பாடு குறித்து மீண்டும் விவாதிக்கப்படலாம்.

இவ்வாறு பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி மார்க்கோஸ் தெரிவித்துள்ளார்.

பிலிப்பீன்ஸ் தேர்தலில் ஊழல், மோசடி, வன்முறை போன்ற சம்பவங்கள் தாராளமாக நடந்துள்ளதாகக் கூறி அமெரிக்க கண்காணிப்புக் குழுத்தலைவர் ஜனாதிபதி தெரிவைக் கண்டித்துள்ளார். இதையடுத்து ஜனாதிபதி றேகனும் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

இந்தக் கண்டனங்களை அமெரிக்கா வெளியிட்டிருக்கும் பொழுதே மார்க்கோஸ் இராணுவ தளப் பேச்சு நடத்துவது பற்றி குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் ஜனாதிபதி மார்க்கோஸ் அமெரிக்காவின் விசேட தூதர் பிலிப்ஹபீபைப் சந்தித்து தனது தேர்தல் வெற்றி பற்றிய விடயங்களை விளக்கியதாக செய்திகளில் கூறப்பட்டது.

தேர்தல் முறைகேடுகள் பற்றி ஆராய வந்துள்ள திரு. பிலிப் ஹபீப் திருமதி கொருசன் அக்கியூனோவையும் சந்திப்பார் எனவும் நம்பப்படுகிறது.

திருமதி அக்கியூனோ பிரமாண்ட பொதுக் கூட்டமொன்றில் தேர்தல் முடிவுக்கெதிராக பிரார்த்தனை இயக்கமொன்று தொடங்கப் போவதாக அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## பிலிப்பீன்ஸில் பிரமாண்ட இராணுவ தளங்கள் வேண்டும்

### அமெரிக்க செனட் கருத்து

லொஸ்ஏஞ்சல்ஸ்,பெப்17
பிலிப்பீன்ஸில் பிரமாண்டமான இராணுவ தளங்களை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை பாதுகாப்புத்திணைக்களம் தீவிரமாக ஆராயவேண்டும்.

இவ்வாறு அமெரிக்க செனட் சபையின் பெரும்பான்மைத் தலைவர் ரேபேர்ட் டோல் கேட்டுக் கொண்டுள்ளார்.

பிலிப்பீன்ஸில் உள்ள இரண்டு இராணுவ தளங்களுமே அமெரிக்க நலன்களை அப்பிராந்தியத்தில் பேணுவதற்குரிய தகுதி பெற்றிருப்பதாக பாதுகாப்புச் செயலாளர் கஸ்பார் வெயின்பேகர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க இராணுவ தளங்கள் பற்றி தொடர்ந்து கூறிய வெயின்பேகர்,

"அந்த இராணுவதளங்களை இழக்க நேர்ந்தால் வேறு எங்காவது இரண்டு தீவுகளை நாம் புதிதாக அமைக்க வேண்டிவரும்" என்றார்.

இப்பொழுது அமெரிக்க இராணுவத் தளங்களாகிளாக் விமான தளமும் சூபிக்குடா கடற்படை தளமும் இருந்து வருகின்றன.

## ஹெக்டே மீண்டும் முதல்வர்

பெங்களூர், பெப் 17
திரு ராமகிருஷ்ண ஹெக்டே மீண்டும் கர்நாடாக மாநில முதலமைச்சராகப் பதவி ஏற்றார்.

ஞாயிறு பிற்பகல் பதவி ஏற்பு வைபவம் ஆளுநர் கே. எம். பானர்ஜியால் நடத்திவைக்கப்பட்டது.

உயர் நீதிமன்றத் தீர்ப்பு ஒன்றைத் தொடர்ந்து ராஜினாமாச் செய்த திரு ஹெக்டேயை சட்டசபை ஜனதாக் கட்சி மீண்டும் தலைவராகத் தெரிவு செய்தது.

## கமலின் உள்ளம் கவர்ந்த கண்ணியக் கலைஞர் ஜெய்

"ஜெய் சார் பண்பு மிக்கவர். என்னை அவர் எங்கு சந்தித்தாலும் "எப்படி இருக்கே கமல்?" என்று அன்புடன்விசாரிப்பார்.

கமலஹாசன் தமது உள்ளம் கவர்ந்தவர் களைப்பற்றி குறிப்பிடுகையில், நடிகர் ஜெய்சங்கர் குறித்து இப்படிச் சொன்னார்.

அவர் ஜெய்சங்கர் பற்றி மேலும் குறிப்பிடுகையில்,

ஜெய் சாரின் உள்ளம், அதன் உயர் பண்பு, பண்போடு பிணைந்து கிடக்கும் அன்பு ஆகியவை என்னைப் பல ஆண்டுகளாகப் பிரமிக்க வைத்து வருகின்றன.

நான் நடிகனாவதற்கு முன் நாட்டியமாடிக் கொண்டு இருந்தகாலத்திலேயே அவரை நன்றாக அறிந்து கொண்டவன்.

என்னை அவர் எங்கு கண்டாலும் "எப்படி இருக்கே கமல்?" என்று அன்புடன் விசாரிப்பார். அந்த அன்பும் பரிவும் இன்றுவரை அவரிடம் இருந்து வருகின்றன.

சினிமாவில் நான் நடிகனாகி புகழ்பெற்ற பின்னரும் ஜெய் சாரின் அன்பும் பண்பும் அப்படியேதான் இருந்து வருகிறது.

உரிமையோடு 'டேய் கமல்' என்று அவர் என்னை அழைப்பதுண்டு

ஆனால் சூழ்நிலைக்கு ஏற்ப, அதாவது முக்கிய புள்ளிகளுடன் சந்தித்துவிட்டால் 'கமல் எப்படி இருக்கிறீர்கள்'? என்பார்.

அப்படிப்பட்ட மரியாதையை இடம் பார்த்து அளிக்க வேண்டும் என்பது அவரது உள்ளத்து அன்பின் பிரதிபலிப்பாக அமையும்.

ஏராளமான படங்களில் கதாநாயகனாக நடித்து சிறப்புப் பெற்றவர். குணசித்திரப் பாத்திரம் ஏற்று வில்லனாக நடித்து தனி முத்திரை பதித்து விட்டவர்.

அன்றும் இன்றும் எல்லாக் கலைஞர்களும் அவரிடம் விசேஷ மதிப்பும், மரியாதையும் வைத்து இருக்கிறார்கள்.

அவர் மனிதாபிமானம், மனித நேயம் கொண்ட 'கண்ணியக் கலைஞர்' என்கிறார் கமல்.

தினசரி சினிமா

பங்களாதேஷில்

## ஆட்சிக்கு ஆபத்து வரலாம்

டாக்கா. பெப், 17
பங்களாதேஷில் இராணுவ ஆட்சி ஜனாதிபதி ஜெனரல் எர்ஷாட்டின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான முயற்சிகள் நடைபெறுவதாகக் கூறப்படுகிறது.

அங்குள்ள 21 எதிர் அணிகள் கூட்டாக இதற்கான வேலைத்திட்டங்களை வகுப்பதாகக் கூறப்படுகிறது.

எனினும் அவர்கள் என்னவகையான நடவடிக்கைகளை இதற்கு கையாள்வார்கள் என்பது தெரிவிக்கப்படவில்லை.

ஜனநாயக முறையிலான அரசொன்றை ஏற்படுத்த தாம் ஆலோசித்து வருவதாக எதிராளர்களின் தலைவர் தெரிவித்துள்ளார்.

## ஸ்ரீராமர் ஆலயத்தால் அயோத்தியில் கலவரம்

புதுடில்லி, பெப். 17
அயோத்தியில் ஸ்ரீராமர் ஆலயம் மீண்டும் இந்துக்கள் வழிபாடு நடத்த திறந்து விடப்பட்டதால், இந்து-முஸ்லிம் கலவரம் உருவெடுத்து உள்ளது.

பூட்டப்பட்டு இருந்த இந்த இராமர் ஆலயத்தை மீண்டும் திறந்து விடும்படி கோரி இந்துக்கள் 1950 இல் தொடர்ந்த வழக்கில் அண்மையில்தான் தீர்ப்பு வழங்கப்பட்டது.

அதைத்தொடர்ந்து தான் இந்து-முஸ்லிம் கலவரம் ஏற்பட்டது.

## வெளி உலகில்

# தென் ஆபிரிக்க அரசை கண்டித்து தீர்மானம்

நியூயோர்ச், பெப். 17
தென்ஆபிரிக்க அரசைக் கண்டிக்கும் பாதுகாப்பு சபையின் தீர்மான வாக்கெடுப்பில் அமெரிக்காவும் பிரிட்டனும் கலந்து கொள்ளவில்லை.

பாதுகாப்பு சபையின் ஏனைய 13 அங்கத்துவ நாடுகளும் இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன.

அங்கோலா அரசுக்கெதிராக தென் ஆபிரிக்காவின் உதவியுடன் இயங்கும் 'யூனிட்டா' இயக்கத்தை அமெரிக்கா ஆதரித்து வருவது கண்டிக்கப்பட்டது.

இதற்கெதிராக அமெரிக்கா தனது 'ரத்து ஆணை'யைப் பிரயோகிக்கக் கூடிய அளவுக்கு அமெரிக்காவைக் கண்டிக்கும் தீர்மான வாசகம் வெளிப்படையாக இல்லை என ஐக்கிய நாடுகள் வட்டாரச் செய்திகளில் தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்கப் பிரதிநிதி ஹேபேர்ட் ஒக்கன், யூனிட்டா ஸ்தாபன தலைவர் ஜோனஸ் சாவிம்பிக்கு அமெரிக்காவில் ஏன் செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது என்பதை நியாயப்படுத்தினார்.

சாவிம்பி அங்கோலாவின் 'முழுச் சுதந்திரத்துக்குமான தேசிய யூனியனின்' தலைவர்.

அங்கோலாவின் பிரச்சினையைப் பெறுத்தவரையில் மக்களின் நியாய பூர்வமான அபிலாஷைகளை பிரதிபலிக்கும் நியாயமான மக்கள் இயக்கங்கள் கருத்திற்கொள்ளப்பட வேண்டும். இவ்வாறு ஒக்கன் கூறினார்.

தெ. ஆபிரிக்காவின் ஒருதலைப் பட்சமான அரசின் இனவாதக் கொள்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும்.

இயக்கங்கள் மீது விதிக்கப்பட்டுள்ள தடைகளும் தனி நபர்கள், கட்சிகள் மற்றும் செய்திச் சாதனங்கள் மீது விதிக்கப்பட்டுள்ள தடைகளும் உடனடியாக நீக்கப்படவேண்டும்.

கறுப்பர்களுக்கெதிரான அடக்கு முறைகள் நிறுத்தப்படுவதுடன் நாடுகடத்தப்பட்ட கறுப்பர்கள் மீண்டும் தமது நாட்டுக்கு மீண்டும் வருவதை உறுதி செய்ய வேண்டும்

இவ்வாறு பாதுகாப்பு சபை தீர்மானங்களில் கோரப்பட்டுள்ளது.

தென் ஆபிரிக்காவின் அயலிலுள்ள நாடுகளுக்கும் தீர்மானத்தில் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமது நாடுகளுக்குள் வரும் அகதிகளை பாதுகாக்கவும் பராமரிக்கவும் ஏற்ற வகையில் அந்த ஆபிரிக்க அண்டை நாடுகளுக்கு உதவிகள் வழங்கப்படுமெனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மக்கள் முகம்

### இளைப்பாறினார்

மானிப்பாய், பெப்.18
நவாலி மகாவித்தியாலய ஆரம்ப பிரிவுத் தலைவரும், ஆசிரியருமான திரு. ஆ. செல்லையா தமது அறுபதாவது வயது முடிவில் ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வுபெற்றார்.

நவாலி அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் தமது ஆரம்பக் கல்வியை தொடங்கிய திரு செல்லையா, ஆனைக்கோட்டை அமெரிக்கன் தமிழ்க் கலவன் பாடசாலை, கோப்பாய் சாதனா பாடசாலை ஆகியவற்றில் கல்வி கற்று ஆசிரியராகப்பதவி ஏற்றார்.

நல்லூர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆசிரிய பயிற்சி பெற்ற இவர், பொகவந்தலாவ சென். மேரிஸ் தமிழ்க் கலவன் பாடசாலையில் பதினொரு ஆண்டுகள் சேவையாற்றினார்.

கந்தரோடை கந்தையா தமிழ்க் கலவன் பாடசாலையிலும், கோட்டைக்காடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும் சேவை செய்த பின்னர், 1973 ஆம் ஆண்டிலிருந்து நவாலி மகாவித்தியாலயத்தில் பணி புரிந்தார்.

### மதகு உடைந்தது

யாழ்ப்பாணம், பெப் 18
யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியில் வல்லைப் பகுதியிலுள்ள மதகு ஒன்று உடைந்தது.

பிரதான வீதியில்வல்லை முனியப்பர் கோயிலுக்கும் ஆஸ்பத்திரி அமைந்திருந்த வல்லைச் சந்திக்கும் இடையில் இருக்கும் இம் மதகு, கிழக்குப்புறக் கரையோரமாக இரு இடங்களில் வெடிப்புக்குள்ளாகியுள்ளது.


முதலாண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 28 - 06 - 1960



மறைவு: 18 - 02 - 1985

யோசப் றெக்ஸ் யோகருஜ் (லக்கி)

அன்புள்ள மகனாய்; பாசமுள்ள சகோதரனாய்; பண்புள்ள நண்பனாய் வாழ்ந்துவிட்டு, இதயத்தில் பாய்ந்த குண்டினால் நீர் இறைவனிடம் சென்றாலும் உம் நினைவு எம் நெஞ்சைவிட்டு ஒருபோதும் நீங்காது.

உம் பிரிவால் துயருறும்,
பெற்றோர், உற்றார், உறவினர்,
சகோதரர்கள்: ஜெயருஜ் (கனடா),
தனருஜ் (இந்தியா), ஆனந்தருஜ் (கனடா),
இன்பருஜ் (கனடா),அசம்ரா, றென்சன், ஸ்ரீபன்.
லக்கி ஸ்ரோர்ஸ், வவுனியா.


## மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

# குடும்பத்திட்டத்தின் நோக்கம்என்ன?

### கருத்தரங்கில் விளக்கம்

பலாலி, பெப்.18
குழந்தைகள் பெறுவதை நிறுத்துவது அல்ல குடும்பத் திட்டத்தின் நோக்கம். பத்துக் குழந்தைகளைப் பெற்றாலும் அவற்றைத் திட்டமிட்டுப் பெற்று நல்ல நிலையில் வளர்க்க வழி காட்டுவதே குடும்ப நலத் திட்டத்தின் நோக்கமாகும்.

யாழ் மாவட்ட குடும்ப நலத் திட்டமிடல் அதிகாரி திரு. அ. ச. பூவேந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையில் நடந்த குடிசனவியல், குடும்ப சுகாதாரக் கருத்தரங்கில் பேசுகையில் தான் அவர் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

திரு பூவேந்திரன் மேலும் சொன்னதாவது;

ஒரு போராட்டத்துக்கு சனத்தொகை மட்டும் தேவையாகாது. சரியான முறையில் பயிற்றப்பட்ட மனித வளமே தேவையானது.

வளப்படுத்தாத மனித பாரத்தினை மேலும் பாரமாக்குவதையே குடும்ப நலத் திட்டம் எதிர்க்கிறது.

குழந்தைப் பேறு இல்லாத ஒரு குடும்பத்துக்கு அப்பேறு கிடைக்க வைத்திய ரீதியில் உதவுவதும் குடும்ப நலத் திட்டத்தின் நோக்கமாகும்.

இப்படி திரு. பூவேந்திரன் சொன்னார்.

குடும்பத்திட்ட உதவிப் பணிப்பாளர் திரு. ஏ. ஜே. பெனடிக்ற் பேசுகையில் சொன்னதாவது;

குடும்ப நலனைப் பேணுவது, ஆரோக்கியமுள்ள குழந்தைச் செல்வங்கள் உருவாக வழி சமைப்பது ஆகியவைதான் குடும்ப நலத்திட்டங்களின் நோக்கமாகும்.

குடும்பக் கட்டுப்பாடு அல்ல இத்திட்டங்களின் நோக்கம் என்பதை மக்கள் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். இப்படி அவர் கூறினார்.

யாழ் மாவட்ட குடும்பத் திட்டச் சங்கத் தலைவர் பேராசிரியர் திரு.வி. கே. கணேசலிங்கம் தலைமை வகித்தார்.

## நிறைமாதக் கர்ப்பிணி ஒருவர் தற்கொலை

### கணவனின் குடித்தொல்லை காரணம்

நல்லூர், பெப் 18
கணவனின் குடித் தொல்லை தாங்கமாட்டாமல் நிறைமாதக் கர்ப்பிணிப் பெண் தற்கொலை செய்து கொண்டார். இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை நடந்தது.

உடுவிலைச் சேர்ந்த 28 வயது இளம் குடும்பப் பெண்ணே இவ்வாறு பரிதாபமாக தற்கொலை செய்து கொண்டவராவார்.

இந்தச் சம்பவம் பற்றி மரண விசாரணை சாட்சியங்களில் இருந்து தெரிய வருவதாவது:

இந்தத் தம்பதியர் இருவரும் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு காதலித்து திருமணம் செய்துகொண்டனர்.

காலஞ் சென்றவர் நிறைமாதக் கர்ப்பிணி.

இவரது கணவன் தினமும் மது அருந்துபவராம்.

இதேபோல் சம்பவ தினமும் இவரது கணவர் மது போதையில் வந்த பொழுது காலஞ்சென்றவர் இவரை ஏசினார்.

சற்றுநேரம் பொறுத்து கணவன் மருந்துப் போத்தல் ஒன்றுடன் வந்து மருந்து குடிக்கப் போவதாகப் பயமுறுத்தினார்.

உடனே காலஞ்சென்றவர் அதனைத் தட்டிப் பறித்துக் குடித்து விட்டார்.

இதனாலேயே இவர் மரணமானார்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. க. கேசவன் [illegible] தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

### இன்று சந்திப்பு

கிளிநொச்சி, பெப் 18
கிளிநொச்சி இராணுவ இணைப்பதிகாரியின் அலுவலகத்தில் கடந்த 12ஆம் திகதி நடைபெறவிருந்த கிளிநொச்சி மாவட்ட உயர் அதிகாரிகளின் சந்திப்பு பின் போடப்பட்டது. இன்று 18 ஆம் திகதி சந்திப்பு இடம்பெறும்.

### மகளிர் பிரிவு புதிய கட்டடம்

நாகர்கோயில், பெப் 18
நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் மகளிர் பிரிவுக்கான புதிய கட்டடம் ரூபா இரண்டரை லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது.

இப் புதிய கட்டடத்தை வலயப் பணிப்பாளர் திரு. எஸ். சிமியாம்பிள்ளை நாளை 19 ஆம் திகதி புதன் கிழமை வைபவ ரீதியாகத் திறந்து வைப்பார்.

நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கல்வி அதிகாரி திரு.வி. தங்கராசா கலந்து கொள்வார்.

வித்தியாலய அதிபரும் விழாத் தலைவருமான திரு. எஸ். ஜேய். காந்தராஜ் இதனை தெரிவித்தார்.

## அபகரிக்கப்பட்ட தபால்கள் மீண்டும் பெட்டியில் சேர்க்கப்பட்டன

நாகர்கோயில், பெப் 18
பருத்தித்துறை இராணுவ- பொலீஸ் கூட்டு முகாமிற்கு எடுத்துச் செல்லப்பட்ட தபால்பை இனந்தெரியாத இளைஞர்களினால் தபாற்சேவகரிடமிருந்து அபகரிக்கப்பட்டது.

இது பற்றி அத்தபாற் சேவகர் [illegible] தபாலதிபருக்குமுறையிட்டார். பின்பு அத்தபால்கள் பருத்தித்துறை நவீன சந்தையில் உள்ள தபால் பெட்டியில் கொண்டு வந்து போடப்பட்டிருந்தன என்று கூறப்படுகிறது.

தினமும் ஒருகுறிப்பிட்ட நேரத்தில் தபால்கந்தோரிலிருந்து இராணுவ பொலீஸ் கூட்டு முகாமுக்குரிய கடிதங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

அதே போல் முகாமிலுள்ள இராணுவ பொலீஸ் உத்தியோகத்தர்களும் தங்களது கடிதங்களை இத்தபாற் சேவகர்கள் மூலம் அனுப்புவார்கள்.

சம்பவதினம் அனுப்பப்பட்ட கடிதங்களே அபகரிக்கப்பட்டு புகார் செய்யப்பட்ட மறுநாள் நவீன சந்தையிலுள்ள தபாற் பெட்டியில் சேர்க்கப்பட்டன என்று கூறப்படுகிறது.

## ஹெலிக்கொப்டரில் சென்று இறங்கி திடீர் சோதனை

கிளிநொச்சி, பெப். 18
இரணைமடு, உருத்திரபுரம் ஆகிய பகுதிகளுக்கு ஹெலிக்கொப்டரில் சென்ற இராணுவத்தினர் ஹெலிக்கொப்டரில் இருந்து இறங்கி திடீர் சோதனை நடத்தினர் துப்பாக்கி வேட்டுக்களையும் தீர்த்தனர்.

இதேவேளைகிளிநொச்சி திருநகர் பகுதிக்கு சென்ற இராணுவம் வீதியில் வந்த பலரைச் சோதனையிட்டது. அப்போது சிலரது பணமுங் கூறையாடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இரவு வேளைகளில் இராணுவத்தினர் முகாமை விட்டு வெளியேறி கிராமங்களுக்குள் நுழைகின்றனர்.

இதனால் பொதுமக்கள் பீதியுற்றுள்ளனர். இரவு வேளைகளில் நடைபவனியில் பரந்தன், முரசுமோட்டைப் பகுதிக்குள் செல்லும் இராணுவம் பின் காலையில் திரும்பி வரும்போது லொறிகளையும் வாகனங்களையும் மறித்து தங்கள் முகாம்களுக்குக் கொண்டு செல்கின்றது.

### திறப்பு விழா

சாவகச்சேரி, பெப் 18
சாவகச்சேரி நகராட்சி மன்றப் பகுதியில் எட்டாம், பதினோராம் வட்டாரங்களுக்கான ஆரம்ப சுகாதார கண்காணிப்பு நிலையம், சிகிச்சை நிலையம் ஆகியவற்றை சுகாதார வைத்திய அதிகாரி திரு. கே. நடராசா மங்கள தீபம் ஏற்றித் திறந்து வைத்தார்.

நகராட்சி மன்றத்தின் செயலாளர் திரு. த. நவரத்தினராசா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு ஆசி உரை வழங்கினார்.

## தாயும் மகளும் கைது

மட்டக்களப்பு, பெப். 18
புளியடிக்குடாவில் 40 வயது தாயும் 6 வயது மகளும் ஆயுதப் படையினரால் சனிக்கிழமை நள்ளிரவில் கைது செய்யப்பட்டனர்.

மட்டக்களப்பு, புளியடிக்குடாவில் ஒருவீட்டை சனி நள்ளிரவு ஆயுதப் படையினர் முற்றுகை இட்டுச் சோதனை இட்டனர்.

அச்சமயமே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

தாயின் பெயர் செபமாலை அம்மா. மகளின் பெயர் இருதயமேரி

### தமிழகத்திலிருந்து திரும்புவர்

மட்டக்களப்பு, பெப். 18
தமிழகம் சென்றுள்ள இழக்கிலங்கை தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்கள் மூவர் பெப்ரவரி20 இல் நாடுதிரும்புகின்றனர்.

அம்பாறை மாவட்ட அபிவிருத்திச் சபை முன்னாள் உறுப்பினர் திரு. கா. வேல்முருகு, மட்டக்களப்பு அபிவிருத்திச் சபையின் முன்னாள் தலைவர் திரு. க. சம்பந்தமூர்த்தி, முன்னாள் உறுப்பினர் திரு. அல்பர்ட் சிவரத்தினம் ஆகியோரே அவர்கள்.

இவர்களுடன் சென்று இருந்த மட்டக்களப்பு மாநகர சபை முன்னாள் மேயர் திரு. இரா. அம்பலவாணர் ஏற்கனவே நாடு திரும்பி விட்டார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

பக்தி உடையார் காரியத்திற் பதறார், மிகுந்த பொறுமையுடன் வித்து முளைக்கும் தன்மைபோல் மெல்லச் செய்து பயனடைவர்.

- மகாகவி பாரதியார்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல: 15, 2வது ஒழுங்கை, [illegible] நிலை வீதி. யாழ்ப்பாணம்,

தொலைபேசி: 24805 22073

18-02-86 உ. வே. 23


## கல்விப் பாரம்பரியம்

யாழ்ப்பாண மண்ணின் தனியான கல்விப் பாரம்பரியத்தைப் பேணிக்காக்க வேண்டும். இவ்வாறு குரல் எழுப்பப்பட்டிருக்கிறது

யாழ்ப்பாண மாவட்டப் பிரதம கல்வி அதிகாரி திரு இ. சுந்தரலிங்கமே இவ்வாறு குரல் கொடுத்திருக்கின்றார். சாவகச்சேரி இந்துமகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இவ்விஷயத்தை அவர் வலியுறுத்தி இருக்கிறார்.

யாழ்ப்பாணத்தின் கல்விப் பாரம்பரியம் தனித்துவமானது. நீண்டகால வரலாற்றைக் கொண்டது. யாழ்ப்பாண மக்களுக்குக் கல்வி, அறிவு வளம் மட்டுமன்று; பொருளாதார வளமும் அதுவே. ஆனால் இரண்டாவதற்கு முதன்மை இடமும் மதிப்பும் கொடுக்கப்படும் பழக்கத்தால் சமூகத்தில் பல வேண்டாத நொய்வு தொய்வுகளும் ஏற்பட்டது உண்டு.

எனினும் கல்வி வளத்தை நமது முன்னோரும் வழித்தோன்றல்களும் பெருக்கிக் கொண்டதால்தான் எத்துணை இடர் வந்தாலும் அதற்கு ஈடுகொடுக்கக் கூடிய மனத் தைரியம் வளர்ந்திருக்கிறது. அறிவினால் ஆகாதது ஒன்றில்லை என்பதை யாழ்ப்பாணத்தின் கல்வி வளம் நிரூபித்துக் கொண்டிருக்கிறது.

ஆனால் எமது வருங்காலச் சந்ததி......? நினைக்கவே மனம் நோகிறது. எமது இளம் சந்ததியினர் கல்வியில் போதிய அக்கறை காட்டுவதாக இல்லை. இது தனி ஒருவனுக்குக் கவலைதரும் விடயமல்ல. எமது தமிழ் சமுதாயமே கவலைப்பட வேண்டிய ஒன்று.

எமது அருமந்த கல்விப் பாரம்பரியத்தை இப்போது மெதுமெதுவாக இழந்து வருகிறோம். முந்திய சந்ததிக்கும் அடுத்த சந்ததிக்கும் வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் இடைவெளி இருப்பது இயல்பு என்கிறார்கள். இந்தச் சந்ததி இடைவெளி (Generation Gap) கல்வித்துறையிலும் தோன்றி இருப்பது பெரும் ஆபத்தைத் தரும்.

இன்றைய மாணவர்கள் கல்வியில் உரிய அக்கறை காட்டுவதாக இல்லை. ஏதோ பாடசாலைக்குப் போயாயிற்று, படித்தாயிற்று என்ற நிலையில் இருக்கிறார்கள். இன்னும் சிலர் பாடசாலைக்குப் போனோம், ரியூட்டரிக்குப் போனோம், படித்தோம் என்று இருக்கிறார்கள். அதுமட்டுமன்றி மாணவர்களில் பெரும்பாலானோர் படித்தோம், பரீட்சை எழுதிவிட்டோம் என்ற நிலைப்பாட்டுடன் நிற்கிறார்கள்.

ஆனால் படித்தவர்களின் அணிகலன்களாகக் கருதப்படும் நற்குணம், அடக்கம், பண்பு, ஒழுக்கம், கட்டுப்பாடு, கண்ணியம், பிறரை மதிக்கும் நல்லியல்பு, வாழ்க்கைக்கு உரிய பயிற்சி எதனையுமே பெரும்பான்மையான மாணவர்களிடம் காணமுடியவில்லை.

தாம் நினைத்ததைச் செய்ய வேண்டும் என்ற கட்டற்ற நிலையும், தமது எண்ணத்தையும் செயலையும் பிறர்மீது திணிக்க வேண்டும் என்ற மனப் போக்குமே இன்றைய மாணவர் மத்தியில் மலிந்து வருகின்றன. மூத்தவர்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும் – அவர்களது ஆலோசனைகளைக் கேட்டு ஒழுக வேண்டும் என்ற நெறிமுறை எதுவும் அவர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

இவையாவும் சந்ததி இடைவெளி என்று கூறிக்கொண்டு பெற்றோரும் ஆசிரியரும் மூத்தோரும் வாளா இருக்கலாமா? அவ்வாறாயின் எமது கல்விப் பாரம்பரியம் செத்தொழிந்து போகாதா?

மாணவ மணிகள் இளம் பராயத்தினர். 'இளங்கன்று பயமறியாது' என்ற சொல் வழக்கு உண்டு. எனவே மாணவர்களை எதிர்காலத்தின் நற்பிரஜைகளாக வளர்த்துவிடும் பொறுப்பு பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் ஆகியோரிடமே உண்டு.

சிறியோர் செய்யும் பிழையை பெரியோர் பொறுத்து அவர்களுக்குப் புத்திமதி கூறி எமது கல்விப் பாரம்பரியத்தையும், ஒழுக்கம், பண்பாட்டுப் பாரம்பரியங்களையும் ஊட்டுவது பெரியவர்களின் பொறுப்பும் கடமையும் ஆகும். அதில் பெரும் பங்கு தாய்மாருக்கு உண்டு.

# மக்கள் வங்கி

## தேசிய சேமிப்பு வங்கி

## இடம் மாற்றம் கைவிடப்பட்டது

பருத்தித்துறை, பெப். 18

பருத்தித்துறை மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகளை இடம் மாற்ற எடுத்த நடவடிக்கை, பலத்த எதிர்ப்பின் காரணமாகக் கைவிடப்பட்டது.

இவ்வங்கிக் கிளைகளை நெல்லியடிக்கு மாற்றும் நோக்கத்துடன் அவற்றின் தளபாடங்களை ஏற்ற ஆயத்தம் செய்யப்பட்ட போது பருத்தித்துறைப் பிரஜைகள் குழு, விழிப்புக் குழு உட்பட பொது மக்களும் ஒன்று சேர்ந்து ஆட்சேபம் தெரிவித்தனர்.

இந்த ஆட்சேபத்தைத் தொடர்ந்து இவ்வங்கிக் கிளைகள் இடம் மாற்றப்படுவது உடன் நிறுத்தப்பட்டது.

ஆயினும் வங்கிக் கிளைகள் தொடர்ந்து மூடப்பட்டுள்ளன.

பருத்தித்துறை, மக்கள் வங்கிக் கிளை நேற்றுமுதல் நெல்லியடிக்கு இடம் மாற்ற முடிவு செய்யப்பதது,

எனினும் பலத்த ஆட்சேபத்தினால் இந்த நடவடிக்கை கைவிடப்பட்டிருந்தது.

# அதிகாரப் பரவலாக்கல்

## அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும்

### மேல் மினுமினுப்பாக இருக்கக் கூடாது

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாற்று யோசனைகளிலும் பார்க்க முன்னர் கொண்டு வரப்பட்ட 'இணைப்பு-சி' பரவாயில்லை என்று திரு. ஜெயவர்த்தனா இப்போது கருதுகிறாராம்.

'இந்தியாவின் கடுமையான சமிக்ஞை' என்ற தலைப்பில் 'புரொன்ட்லைன்' சஞ்சிகையில் வெளியான கட்டுரை ஒன்றில் இத்தகவல் வெளியாகியுள்ளது.

இக்கட்டுரையின் முதல்பகுதி நேற்று உதயனில் பிரசுரமாகியது. இறுதிப் பகுதி இன்று பிரசுரமாகிறது. கட்டுரையை எழுதியவர்: மாலினி பார்த்தசாரதி.

### பகுதி II

யுத்த நிறுத்தம் என்ற போர்வையில் தமிழ்ப் பொதுமக்களுக்கு எதிராக பாதுகாப்புப் படையினரின் அட்டூழியம் அதிகரித்து வரும் பின்னணியில், இலங்கை அரசு அளித்த 57 பக்கப்பதில், பேச்சுக்களில் இலங்கை நல்ல மனதுடன் ஈடுபடுவதைக் காட்டவில்லை.

பேச்சுக்கள் நெருக்கடி அடைந்துள்ள வேளையில் இலங்கையின் பதில் இப்படியான எண்ணத்தைத் தான் தோற்றுவித்துள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களை இணைத்த தனி மொழி மாநிலம் ஒன்று தமிழர் தாயகம் பிரிக்கப் படாத முறையில் அமைய வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாற்றுயோசனைகள் வலியுறுத்தி உள்ளன.

மாநில ரீதியில் நிறைவேற்று, சட்டவாக்க அதிகாரங்கள் கொண்ட ஓரளவு சமஷ்டி ஆட்சி அமைப்பு ஒன்றை ஐக்கிய இலங்கைக்குள் கொண்டு வரக் கூடியதாக கூட்டணியின் மாற்று யோசனைகள் உள்ளன.

இலங்கை அரசின்பதில், வடக்கு-கிழக்கு இணைப்பை நிராகரித்துவிட்டது.

பிரிக்கமுடியாத தமிழர் பாரம்பரிய பிரதேசம் என்பதனையும் அதனோடு இணைந்த பலகோரிக்கைகளையும் ஏற்றுக்கொள்ளவும் இலங்கை அரசு மறுத்துவிட்டது.

இலங்கையின் ஒற்றை ஆட்சி அரசமைப்புச் சட்டத்தின்கீழ் கூட்டணியின் யோசனைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் இலங்கை அரசு வலியுறுத்தியுள்ளது.

'இலங்கை அரசமைப்புச்சட்டம் பிரிட்டிஷ் முறையில் அமையவில்லை; பிரெஞ்சுப் பாணியிலானது. நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதியிடம் உண்டு; தெரிவு செய்யப்பட்ட அமைப்பில் அல்ல. சட்டசபையில் இருந்துதான் எனது மந்திரிகளைத் தெரிவு செய்கிறேன். ஆனால் அவர்கள் நிறைவேற்று அதிகாரங்களை என்னிடமிருந்து தான் பெறுகிறார்கள். சட்டசபையிடமிருந்து அதிகாரத்தை அவர்கள் பெறவில்லை—

இப்படி ஜெயவர்த்தனா 'இந்து'வுக்கு அளித்த பேட்டியில் கூறினார்.

இலங்கை அரசு அனுப்பிய பதிலிலும் இக்கருத்துத்தான் தொனிக்கின்றது.

இப்பொழுது உள்ள பிரச்சினை அதிகாரப் பரவலாக்கலின் கீழ் அதிகாரங்கள் வழங்கப்படுவது சம்பந்தமாகக் காணப்படும் பெரிய இடைவெளிதான்.

இப்பெரிய இடைவெளியை நிரப்புவதில் உள்ள முன்னேற்றம் பற்றி சென்னையில் வைத்துத் திரு பண்டாரியிடம் கேட்கப்பட்டது. அதற்கு திரு. பண்டாரி சொன்னார்: 'அதிகாரப் பரவலாக்கல் அர்த்தமுள்ளதாக இருக்கவேண்டும் என்பதுதான் அடிப்படைப் பிரச்சினை; மேல் மினுப்பாக இருக்கக் கூடாது'—

முன்னர் ஒரு கட்டத்தில் நம்பிக்கை தந்த இணைப்பு - சி இருந்தது.

'இந்துவுக்கு அளித்த பேட்டி ஒன்றில், தற்போதைய கூட்டணி யோசனைகளைப் பேச்சுவார்த்தைகளுக்கு எடுப்பதிலும் பார்க்க, இணைப்பு-சி அடிப்படையில் பேச்சுக்களை நடத்துவதில் ஆட்சேபனை இல்லை என்பது போல் சைகை காட்டியுள்ளார் திரு. ஜெயவர்த்தனா.

இந்த 'அரை இறுதி மொழியை' எடுத்துக் கொள்வதில் திரு. பண்டாரி அக்கறை காட்டுகிறார் போல் தெரிகிறது. அப்படி இல்லை என்றால் நிலைமை ஒளிமயமானதாக இல்லை என்றுதான் கருதவேண்டியுள்ளது.

(முற்றும்)

### பொய்யாமொழி



குறள்:

புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பி லவர்க்கு.

பொருள்:

உடம்பின் அகத்து உறுப்பாகிய அன்பு இல்லாதவர்க்கு உடம்பின் புறத்து உறுப்புக்கள் எல்லாம் என்ன பயன் செய்யும்?

வடமராட்சி வடக்கு, கிழக்கு

# அரச அதிபர் பணிமனை:

## பழைய இடத்துக்கு

### கொண்டுவரக் கோரிக்கை

நாகர்கோயில், பெப் 18

பருத்தித்துறை நகரிலிருந்து புலோலி கமநலசேவை நிலையத்திற்கு இடம் மாற்றப்பட்டவடமராட்சி வடக்கு கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையை உடனடியாக ஏற்கனவே இயங்கி வந்த இடத்திற்குக் கொண்டுவரவேண்டும் என்று கோரப்பட்டிருக்கிறது.

பருத்தித்துறைபிரஜைகள் குழு சனிக்கிழமை மாலை சிவன்கோவிலில் பர்வதபத்தினி கலாமண்டபத்தில் பேராசிரியர் திரு. வி. கே. கணேசலிங்கம் தலைமையில் கூடியது.

பருத்தித்துறைப் பொதுமக்கள், அரசஅலுவலக ஊழியர்கள், கூட்டுறவுச்சங்க ஊழியர்கள், வங்கிஊழியர்கள், வர்த்தகர்கள் உட்படப் பலர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்:

பருத்தித்துறை மக்கள் வங்கிக்கிளையை நெல்லியடிக்கு இடம்மாற்றஞ் செய்ய அனுமதி வழங்கப்பட்டதை இப்பகுதிப் பொது மக்கள் ஆட்சேபித்தார்கள்.

இக்கிளையைஇடம்மாற்றம் செய்வதை உடனடியாக மக்கள் வங்கிப் பொது முகாமையாளருடன் தொடர்புகொண்டு நிறுத்தவேண்டுமெனக் கோரப்பட்டது.

மேலும் கடந்த பத்து நாட்களாக இயங்காமலிருந்த இலங்கை வங்கி, மக்கள்வங்கி, தேசிய சேமிப்புவங்கி ஆகியவற்றின் கிளைகளை இயங்கச் செய்து இப்பகுதி வாடிக்கையாளர்களது கஷ்டங்களையும் ஒய்வூதியம் பெறுபவர்களின் கொடுப்பனவுகளையும் பூர்த்திசெய்யவேண்டுமெனவும் கோரப்பட்டது.

மருதடியிலுள்ள தற்காலிக சந்தையையும் சிவன்கோயில் வீதியிலுள்ள தற்காலிக சந்தையையும் திங்கட்கிழமை முதல் நவீன சந்தையிலேயே இயங்கச் செய்யவேண்டுமென பருத்தித்துறை நகரசபை செயலாளரிடம் வேண்டுகோள் விடப்பட்டது.

பருத்தித்துறை இ. போ. ச. பஸ் சேவையை பஸ் நிலையத்திலிருந்து ஆரம்பிக்கவும், மினிபஸ் சேவையை ஏற்கனவே ஒதுக்கப்பட்ட மினிபஸ் நிலையத்திலிருந்து ஆரம்பிக்கவும் பருத்தித்துறை விழிப்புக்குழு நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளது.

இ. போ. ச. பஸ் நிலைய நேரக் கணிப்பாளர்காரியாலயமும் திறக்கப்படவேண்டுமெனவும் நவீன சந்தையிலுள்ள வர்த்தக ஸ்தாபனங்கள் திறக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை நகரசபைக் காரியாலயத்தின் ஒரு பகுதியை மாத்திரம் தற்காலிகமாக வேறு இடத்திற்குமாற்ற இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

நீதிவான் நீதி மன்றம், மாவட்ட நீதிமன்றம் ஆகியன தொடர்பாக நீதி அமைச்சுடன் தொடர்புகொண்டு ஏற்ற நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

எந்தவொரு அரசாங்க தனியார் துறையினரும் தங்களது சொந்தக் கட்டடங்களைவிட்டு வெளியேறக்கூடாது எனக்கேட்கப்பட்டுள்ளது.

நாங்கள் முகாமிற்கு அருகிலுள்ள எமது நிலத்தைவிட்டு வெளியேறிச் சென்றால் இன்றைய அரசு பருத்தித்துறையிலுள்ள ஆயிரம் மீற்றர் பகுதிக்கும் இராணுவ விஸ்தரிப்புச் செய்யத் தயங்காது. இதனாலேயே வெளியேறிய எல்லா ஸ்தாபனங்களும் மீண்டும் நவீன சந்தையிலேயே இயங்கவேண்டும் எனவும் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

### கமநல சேவை நிலையம் சேதம்

மட்டக்களப்பு, பெப் 18

மட்டக்களப்பு, மண்டபத்தடியில் உள்ள கமநல சேவை நிலையம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இனந்தெரியாதவர்களினால் சேதமாக்கப்பட்டது.

தளபாடங்கள், கதவுகள், யன்னல்கள் வாகனம் ஒன்றில் அக்கோஷ்டியினரால் ஏற்றிச் செல்லப்பட்டன.

# சிறுவர்களை நல்வழியில்

## நெறிப்படுத்துவது அவசியம்

### பாலர் பாடசாலை திறப்பு விழாவில் உரை

காங்கேசன் துறை, பெப். 18

சிறுவயதில் நமது சிறார்களை நல்ல வழியில் நெறிப்படுத்தி நல்ல அறிவைப் புகட்டுவதன் மூலம்தான் எதிர்காலத்தில் நமது இனத்தை வழிநடத்தும் வழிகாட்டிகளாக அவர்கள் மாற முடியும்.

தெல்லிப்பழை செல்வா ஐக்கிய கலாசார நிலையம் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் [illegible] வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தலைவர் . திரு எஸ். சிவமகாராசா மேற்கண்டவாறு கூறினார்.

நிலையத்தலைவர் திரு. எஸ். சொலமன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

பாலர் கல்வியின் அத்தியாவசியத்தை உணர்ந்து எமது ப. நோ. கூ. [illegible] லும் பாலர் பாடசாலை [illegible] வருகின்றது.

இப்பாடசாலைகள் பாலர் கல்வியுடன் மட்டும் நிற்காது ஏனைய வகுப்பு மாணவர்களுக்கான பகுதிநேர வகுப்புக்களையும் நடத்த முன்வரவேண்டும்.

எமது மக்களின் கல்வி நிலை சீரற்றுள்ள இன்றைய நிலையில் கல்வி வளர்ச்சியைப் பேணுவதற்கு இவ்வாறான கல்விக் கூடங்கள் மிகவும் அவசியமானவை.

மாணவ சமுதாயத்தின் கல்வி விருத்திக்கு இவை நல்ல வழிவகைகளைக் காணவேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

## வவுனியாவில் நால்வர் விடுதலை

யாழ்ப்பாணம், பெப்18

வவுனியா இராணுவ முகாமிலிருந்து ஞாயிறு மாலை நான்கு இளைஞர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

அவர்கள் விவரம் வருமாறு:-

1. முகமது அன்சாரி, பட்டாணிச்சபுளியங்குளத்தைச் சேர்ந்தவர்.
2. கோபால் கந்தசாமி, சின்னப்புதுக்குளத்தைச் சேர்ந்தவர்.
3. இரத்தினசபாபதி லோகராஜா
4. பொன்னையா சுப்பிரமணியம், வவுனியா நான்காம் கட்டையைச் சேர்ந்தவர்.

### வாசகர் திருமுகம்

## கணேச வித்தியாசாலை தரம் உயரவேண்டும்

ஊரெழு கணேச வித்தியாசாலை தரமுயர்த்தப் படவேண்டும்.

இன்றுள்ள நெருக்கடி சூழ்நிலையில் இது அவசியம் செய்யப்படவேண்டும்.

போக்குவரத்துக் கஷ்டங்களினால் ஊரெழு மாணவர்கள் உயர்கல்வி பெற வேறு பாடசாலைகளுக்குச் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த வித்தியாசாலை க. பொ. த. உயர்தர வகுப்புவரை நடத்தக்கூடியதாகத் தரமுயர்த்தப் பட்டால், கிராமசூழலில் பாதுகாப்பாக உயர்கல்வி பெறும் வாய்ப்பை ஊரெழு மாணவர்கள் பெறுவர்.

வடமாநிலக் கல்விப் பணிப்பாளரும் ஏனைய அதிகாரிகளும் இதுவிடயத்தில் தீவிர கவனஞ்செலுத்தி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஊரெழு மக்கள் ஆவலோடு எதிர்பார்க்கின்றனர்.

ந. து. ஜெயநீஸ்வரன்,
ஊரெழு

கிளிநொச்சி சம்பவம்:

# இராம சேவகர் சாட்சிகளை ஆஜர் செய்தார்

கிளிநொச்சி, பெப். 18

கிளிநொச்சி ரயில் நிலைய, பொதுச்சந்தை துப்பாக்கிச் சூட்டு மரணங்கள் சம்பந்தமான விசாரணை கடந்த 13 ஆம் திகதி நடைபெற்றபோது கிளிநொச்சி கிராம சேவகர் திரு எஸ். தனபாலசிங்கம் சாட்சியங்களை ஆஜர் செய்தார்.

ரயில் நிலையத்தில் இறந்தவர்களில் திருகோணமலையைச் சேர்ந்த திருமதி சின்னமணி தங்கராசா (வயது 40), இவரது மகள் செல்வி சுகந்தினி தங்கராசா (வயது 11) கிளிநொச்சி நீர்ப்பாசன இலாகா ஊழியர் துரைச்சாமி கதிர்காமு (வயது 18) கிளிநொச்சி பாரதிபுரத்தைச் சேர்ந்த மணிக்கடை அங்காடி வியாபாரி பாண்டி சிவகுரு (வயது 21) திருநகரைச் சேர்ந்த வயோதிப மாது திருமதி தங்கம்மா குலசேகரம் (வயது 78) ஆகியோரது மரணவிசாரணையும் கிளிநொச்சி, சந்தையில் மரணமான கோழி வியாபாரியான இரத்தினபுரத்தைச் சேர்ந்த இராமலிங்கம் அழகையாவின் (வயது 48) மரண விசாரணையுமே அன்று நடத்தப்பட்டன.

இதேசம்பவத்தில் ரயில் நிலயத்தில் இறந்த நல்லையா ரூபதாஸ் (வயது 8) என்பவரது மரண விசாரணை நடைபெறவில்லை. இறந்தவரது தந்தையார் திரு. நல்லையா என்பவர் இதே சம்பவத்தில் படுகாயமுற்று யாழ்ப்பாண அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இதனால் கிராம சேவகர் எஸ் தனபாலசிங்கம் சாட்சியங்களை நெறிப்படுத்த தவணை கோரியதால் 12-3-86க்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

மேலும் இச்சம்பவத்தில் இறந்த ஜெயந்தி நகரைச் சேர்ந்த முத்தையா மகேந்திரன், வவுனியாவைச் சேர்ந்த பொன்னம்பலம் சோமசேகரம் ஆகியோரது சடலங்களை சம்பவத்தின்போது மனவிரக்தியுற்ற பொதுமக்கள் எடுத்துச் சென்றதால் இவர்களுக்கான மரணவிசாரணைகளும் நடைபெறவில்லை.

ஏனையவர்களின் மரணம் தொடர்பாக கண்கண்ட சாட்சியங்களாக கிளிநொச்சி உதவி ரயில் நிலைய அதிபர் எஸ். முருகேசு, கொழும்புக்கு பயணமாகவிருந்த பயணி கணபதிப்பிள்ளை செல்வரத்தினம், வழியனுப்ப வந்த சுப்பிரமணியம் பத்மநாதன், கூலித்தொழிலாளி ச. செல்வரெத்தினம், கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையைச் சேர்ந்த பதிவு வைத்தியர் சுப்பிரமணியம் பத்மநாதன் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

சாட்சியங்கள் ஏற்கனவே உதயனில் வெளிவந்து விட்டன

### சமய சந்நிதிகளில்

## அபிராமிப்பட்டர் தினம்

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தில் அபிராமிப் பட்டர் தினம் பக்திசிரத்தையுடன் கொண்டாடப்பட்டது.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் 200க்கும் அதிகமான அம்பாள் அடியார்கள் அபிராமி அந்தாதி ஓதுவதில் பங்கு பற்றிச் சிறப்பித்தனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வெளிவந்துவிட்டது!
மழலைத் தமிழ் அமுதம்
—அரிவரிப் புத்தகம்—
ஆக்கம்: இளஞ் சைவப் புலவர் இ. ஸ்ரீதரன்
பாலர் வகுப்புக்கான புதிய பாடத்திட்டத்துக்கு அமைவாக எழுதப்பெற்ற புதிய சிறந்த நூல். அழகிய வண்ணப் பதிப்பு.
விலை: ரூபா 9-00
விற்பனையாளர்: பூபாலசிங்கம் புத்தகசாலை
4-A, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23631

# உதயன்

18. 02. 1986

விற்பனையாகின்றது!
பாலர் வகுப்பு புதிய திட்டத்திலமைந்த
மழலைத் தமிழ் அமுதம்
ஆக்கம்: இளஞ் சைவப் புலவர் இ. ஸ்ரீதரன்
விலை: ரூபா 9-00
கிடைக்கும் இடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

# மோட்டார் சைக்கிளில் சென்றவரை ஹெலிக்கொப்டர் துரத்திச்சுட்டது

## மருதங்கேணியில் நடந்த பயங்கரம்

— தாளையடி, நாகர்கோவில், பருத்தித்துறை செய்தியாளர்கள் —

நாகர்கோவில், பெப். 18

ஞாயிறு காலை குறிஞ்சாத்தீவில் நடந்த சம்பவத்தை அடுத்து மருதங்கேணியில் இளைஞர் ஒருவர் ஹெலிக்கொப்டர் சூட்டுக்குப் பலியானார்.

சம்பவதினமான ஞாயிற்றுக்கிழமை மருதங்கேணி - பளை பிரதான வீதியில் இரண்டு தனியார் வாகனங்கள் செல்வதைக் கண்ட ஹெலிக்கொப்டர் ஒன்றும் விமானம் ஒன்றும் மாறி மாறித் தாழப் பறந்து சுட்டன.

அவ்வாகனங்களில் வந்தவர்கள் வாகனத்தை விட்டுவிட்டு ஓடிவிட்டார்கள். வாகனங்கள் இரண்டும் குண்டுவீச்சுக்கு இலக்காகி முற்றிலும் சேதமடைந்தன.

பின்பு அவ்வழியால் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞரைத் துரத்திச் சுட்டதில் அவர் அதே இடத்தில் மரணமடைந்தார்.

இவற்றைத் தொடர்ந்து தாழப்பறந்த ஹெலிக்கொப்டரும் விமானமும் மருதங்கேணிச் சந்தையில் மக்கள் கூடி நிற்பதைக் கண்டு தொடர்ச்சியாகத் துப்பாக்கிகளாலும் மோட்டார் ஷெல்களினாலும் சுட்டன.

இதனால் மருதங்கேணி சந்தைக் கட்டடமும், அதனைச் சுற்றியுள்ள வர்த்தக நிறுவனங்கள், வீடுகள், மரங்கள் பலத்த சேதமுற்றுள்ளன. இப்பகுதியிலுள்ள பல கால்நடைகளும் இறந்தன.

தாக்குதலில் சுமார் இருபதுக்கு அதிகமானவர்கள் காயமடைந்தனர். இவர்களில் எழுவர் மாலை 3-00 மணி அளவில் இளைஞர்களால் மந்திகை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இவர்களில் கந்தசாமி விமலராஜா (வயது 19) செம்பியன்பற்று, சின்னத்தம்பி முருகேசு (வயது 68) செம்பியன்பற்று ஆகியோர் அவசர சத்திர சிகிச்சைக்காக யாழ்ப்பாண வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்கள்.

ஏனைய ஐந்து பேரும் மந்திகை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

காயமடைந்தவர்கள் சந்தையில் வியாபாரம் செய்பவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மந்திகை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவோர் விவரம்:

வல்லிபுரம் தவராசா, வயது 24 தாளையடி. வேலுப்பிள்ளை சின்னத்தம்பி, வயது 26. மருதங்கேணி எஸ். ஜே. நல்லையா வயது 66 செம்பியன்பற்று. ஆறுமுகம் விஞசித்தம்பி வயது 70. உடுத்துறை சின்னத்தம்பி கதிராத்தை வயது 76 மருதங்கேணி.

ஏனைய சிறு காயமடைந்தவர்கள் மருதங்கேணி அரசினர் கிராமிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

தாளையடிப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற விமானக் குண்டுத் தாக்குதலையடுத்து அப்பகுதியில் தொடர்ந்தும் பயான அமைதி நிலவுகிறது.

வீதிகளில் சன நடமாட்டம் குறைவாகவே காணப்படுகிறது.

கடைகள் மூடப்பட்ட நிலையிலேயே உள்ளன.

குண்டுகள் வெடித்த இடங்களிலுள்ள புற்கள் கருகியும் பெரிய மரங்கள் முறிந்தும், கருகியும் காணப்படுகின்றன.

அதேசமயம் தாளையடி கடற் பிரதேசத்தில் பெரிய அளவிலான கடற்படைக் கப்பல்களின் ரோந்து அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதனால் அப்பகுதி மீனவர்கள் பெரும் பீதி அடைந்துள்ளனர்.

## சங்காபிஷேகம்

சுன்னாகம், பெப். 18

இன்று செவ்வாய்க்கிழமை மானிப்பாய் வீதியிலுள்ள சிவன் ஆலயத்தில் சங்காபிஷேகம் நடைபெறுகிறது.

நண்பகல் இரண்டு மணிக்கு பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

## குகதாசனுக்கு பிரியாவிடை

நல்லூர், பெப். 18

யாழ் இந்துக் கல்லூரியில் கடந்த 13 வருடகாலமாக கல்விச் சேவை யாற்றிய பின்பு சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு அதிபராக உயர்வு பெற்ற திரு. கே எஸ். குகதாசனுக்கு இன்று யாழ் இந்துக் கல்லூரி ஆசிரியர் கழகம் பிரியாவிடை வைபவம் நடத்துகிறது.

பகல் ஒரு மணி அளவில் கல்லூரி ஆசிரியர் கழக அறையில் இவ்வைபவம் நடைபெறும்.

## பருத்தித்துறையில் இன்னும் கடைகள், அலுவலகங்கள் மூடிக் கிடக்கின்றன

பருத்தித்துறை, பெப். 18

பருத்தித்துறை நகரம் இன்னமும் வழமைக்குத் திருப்பவில்லை.

நகரில் உள்ள இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகள், நீதிமன்றங்கள், நகரசபை, மரக்கறி, மீன் சந்தைகள், சந்தைக் கட்டடக்கடைகள், சுற்றுடல் கடைகள் அனைத்தும் மூடப்பட்டுக் கிடக்கின்றன.

எனினும் சுற்றுடல் பகுதியில் அதாவது பஸ் நிலையத்துக்கு அருகில் இலங்கை வங்கி அமைந்துள்ள கட்டடத்தில் இருக்கும் தனியார் பலசரக்குக்கடை, யாழ் ஐக்கிய வியாபாரச் சங்கக் கிளை, பத்திரிகை விற்பனைக் கடை. சந்தையின் தெற்குப் புறத்திலுள்ள ஒரு தேனீர்க் கடை என்பன முழுமையாகவும் ஒற்றைக் கதவிலும் திறந்திருக்கக் காணப்பட்டன.

அத்துடன் நகரின் நுழைவாசலிலிருந்து சிவன் கோயில் சந்தி வரை பிரதான வீதியில் உள்ள கடைகளும் இதேபோல ஒற்றைக் கதவிலும் முழுமையாகவும் திறந்திருக்கக் காணப்பட்டன.

தற்காலிக மரக்கறி, மீன்சந்தைகள், மருதடியில் செயற்பட்டு வருகின்றன.

இதேபோல சிவன் கோயில் வடக்கு வீதியான தும்பளை வீதியிலும், திக்கமுனை மைதானத்திலும் மரக்கறி, மீன் வியாபாரிகள் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இ. போ. ச. பஸ்கள் பஸ்நிலையத்திலிருந்தும், மினிபஸ்கள் மருதடியிலிருந்தும் சேவையாற்றி வருகின்றன.

நகரிலிருந்து வடமராட்சி வடகிழக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் மட்டுமே மந்திகையிலுள்ள புலோலி கமநல சேவை நிலையக் கட்டடத்திற்கு மாற்றப்பட்டு உள்ளது

# விளையாட்டரங்கு

## அரியாலை மென்பந்து கிரிக்கெட் விறுவிறுப்பு

யாழ்ப்பாணம், பெப். 18

அரியாலைக் கிராம, விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான 7பேர் கொண்ட நொக்கவுட் முறையிலான மென்பந்து கிரிக்கெட் போட்டி அரியாலையில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

12 ஓவர்களைக்கொண்ட இந்த கிரிக்கெட் போட்டியை அரியாலை யுனைற்டட் கழகம் நடத்தி வருகிறது.

ஏ. பி. என இரு பிரிவுகளாக நடத்தப்படும் இந்தப் போட்டியில் 17 விளையாட்டுக் கழக அணிகள் பங்குபற்றுகின்றன.

ஏ. பி. ஆகிய இரு பிரிவுகளின் அரை இறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் நடைபெற்றன.

நல்லூர் தெற்கு சனசமூக நிலைய அணிக்கு எதிரான ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலை ஜொலிஸ்ரார்ஸ் அணி 7 5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 56 ஓட்டங்களைப் பெற்றது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய நல்லூர் தெற்கு சனசமூக நிலைய அணி, 11.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 54 ஓட்டங்களைப் பெற்றது.

கச்சேரி ஐடியல் அணிக்கு எதிரான ஆட்டத்தில், கச்சேரி கிறிம்சன் அணி முதலில் துடுப்பெடுத்தாடி 8.5 ஓவர்களில் 32 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

அடுத்து துடுப்பெடுத்தாடிய ஐடியல் அணி 6.3 ஓவர்களில் 1 விக்கெட்டை மாத்திரம் இழந்து 33 ஓட்டங்களைப் பெற்று இலகுவாக வெற்றிபெற்றது.

இவை இரண்டும் 'ஏ' பிரிவு ஆட்டங்கள்.

நேற்று முன்தினம் நடைபெற்ற 'பி' பிரிவு ஆட்டங்களில் 9.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 48 ஓட்டங்களைப் பெற்ற யாழ் வை. எம். சி. ஏ. அணியை, 7.5 ஓவர்களில் 49 ஓட்டங்களைப் பெற்ற கொய்யாத் தோட்டம் விளையாட்டுக் கழக அணி வென்றது.

இந்த அணி 4 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்தது.

மற்றைய ஆட்டத்தில் அரியாலை ஸ்ரீ கலைமகள் அணியை அரியாலை இளைஞர் விளையாட்டுக் கழக அணி, இலகுவாக தோற்கடித்தது.

முதலில் ஆடிய அரியாலை இளைஞர் அணி, ஒதுக்கப்பட்ட ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 97 ஓட்டங்களைப் பெற்றது.

ஸ்ரீ மகள் அணி 8 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 27 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

## யாழ் சென்றலைற்ஸ் 3 ஓட்டங்களால் வெற்றி

யாழ்ப்பாணம், பெப் 18

யாழ்ப்பாணக் கல்லூரிக்கெதிரான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டியில் யாழ் சென்றலைற்ஸ் விளையாட்டுக் கழகம் 3 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைற்ஸ் அணி, 35 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 164 ஓட்டங்களைப் பெற்றது

பி. ராஜீவன் 45 ஓட்டங்களையும் கே. சண்முகலிங்கம் 30 ஓட்டங்களையும் ஏ. நிர்மலன் 28 ஓட்டங்களையும் எம். ஜபார்கான் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.


50 ஓவர்களில் 165 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி, 9 விக்கெட்டுக்களை இழந்து 161 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

அகஸ்ரின், ராகவன் இருவரும் முறையே 33, 40 ஓட்டங்களைப் பெற்றனர்.

இந்த சிநேகபூர்வ ஆட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

## எஸ். ஜெகதீஸ்வரன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியை

18-02-1986



இறைவனுல் தோற்றம்: 1-12-1951
மறைவு- 24-8-1985

அன்பும் பண்பும் பாசமும் கொண்டு கண்ணை இமை காப்பதுபோல என்னைக் காத்துவந்த என் அன்பின் ஆருயிரே! உம்மைப் பிரிந்துவாடும் நானும் எனது மகன் ஜெகரூபனும், காற்றடிக்கும் கடலில் கப்பலானோம். அப்பா என்று அலறும் மகனுக்கு என்ன ஆறுதல் சொல்ல? லொறியில் பொருள் கொண்டு வரும்வழியில், வவுனியா நகரினிலே புத்தரின் புனித தலமருகே, காலன் சுயவர் வடிவில் வந்து, வழிமறித்தானே! உம் உயிர் பறித்தானே!

வீ. எம். எஸ். ஸ்தாபனத்தின் தொழிலதிபர்கட்கும் ஊழியர்கட்கும் பணிவன்புடன் வாழ்ந்து நல்லதோர் சாரதியாக இலங்கையை வலம் வந்த உம்மை இன்று காணோம், உம்பிரிவால் ஆழ்ந்த கவலை கொண்ட அவர்கள் அனைவருக்கும் வேண்டிய வேண்டிய வேளையில் மரணச்சடங்குகளுக்கு நிதியுதவியளித்த தொழிலதிபர் திரு. வீ.எம். சண்முகம் அவர்களுக்கும் எனதும் என் மகனதும் உள்ளம் கனிந்த நன்றி உரித்தாகுக.

அந்தியேட்டிக் கிரியைத் தினமான இன்று எம் தலைவன் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்
மனைவி, மகன்
மச்சான், மாமன், மாமி
ஆகியோர்.

## வடக்கு-கிழக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பில் டாக்டர் நீலன் திருச்செல்வத்தைச் சந்தித்துத் தெரிவித்தது.

இத்தூதுக் குழுவில் கிழக்கிலங்கை முஸ்லிம் இயக்கத் தலைவர் ஜனாப் எம் ஐ. எம். முஹிதீன், முன்னாள் செனட்டர் மஷூர் மௌலானா உட்பட மூவர் அங்கம் வகித்தனர்.

வடக்கு - கிழக்கு இணைப்பு இடம் பெறும் போது முஸ்லிம் மக்களின் நலன் பாதுகாக்கப்படும். அவர்களின் காணி விடயம் பொருளாதாரம், விவசாய நடவடிக்கைகளில் முஸ்லிம்களின் நலன்கள் பாதுகாக்கப்படும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு அ. அமிர்தலிங்கம் விடுத்த அறிக்கையைத் தொடர்ந்து இச் சந்திப்பு இடம் பெற்றது

கிழக்கிலங்கை முஸ்லிம் மக்கள் வடக்கு-கிழக்கு இணைப்பை வெளிப்படையாக ஆதரிக்கத் தயாராக உள்ளனர்.

அதற்கு முன்னோடியாக முஸ்லிம்களின் நலன்கள் பாதுகாக்கப்படும் என்பது குறித்து கூட்டணித் தலைவர்கள் விளக்கங்கள் தரவேண்டும் என்றும் அத்தூதுக்குழு டாக்டர் நீலன் திருச்செல்வத்திடம் தெரிவித்தது

இன்று, செவ்வாய்க்கிழமை இத்தூதுக்குழு சென்னையில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுடன் தொலைபேசியில் நேரடியாகத் தொடர்பு கொள்ள உள்ளது

இத்தகவலையும் தூதுக்குழு, டாக்டர் நீலன் திருச்செல்வத்திடம் தெரிவித்தது

## ஓடினால் சுடுவார்கள் என்றதால் நின்றேன் கீழே விழுத்தி உதைத்தனர்

நல்லூர் செய்தியாளர்: க. இரத்தினராஜசிங்கம்

நல்லூர், பெப். 18

ஓடினால் சுடுவார்கள் என்று சீருடையினரைக் கண்டதும் நான் பயத்தினால் ரயில் பாதையில் நின்றேன். அப்பொழுது எனக்கு அருகில் வந்த சீருடை தரித்த ஒருவர் என்னைக் கீழே விழுத்தி சப்பாத்துக் காலால் உதைத்தார்.

இவ்வாறு முத்துக்கறுப்பன் செல்வம் தெரிவித்தார்.

கிளிநொச்சி சுதந்திரபுரத்தைச் சேர்ந்த முத்துக்கறுப்பன் செல்வம் (26 வயது) என்ற இளைஞன் ஞாயிறன்று சீருடையினரின் தாக்குதலுக்குள்ளாகி யாழ் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இவர் யாழ் வைத்தியசாலையில் வைத்து தமக்கு நடந்த சம்பவம் பற்றி மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த ஞாயிற்றுக்கிழமை ரயில் பாதையில் நின்று கொண்டிருந்தபொழுது முப்பதுக்கும் மேற்பட்ட சீருடையினர் ரயில் பாதையால் வந்து கொண்டிருந்தனர்.

அவர்களைக் கண்ட நான், ஓடினால் சுடுவார்கள் என்ற பயத்தில் ஓடவில்லை. அப்பொழுது எனக்கு அருகில் வந்த சீருடை தரித்த ஒருவர் சப்பாத்துக் காலினால் உதைத்து என்னை விழுத்தினார்.

நான் வயலுக்குள் விழுந்துவிட்டேன். வயலுக்குள் தண்ணீர் கிடந்தது. தண்ணீருக்குள் அமிழ்த்தி அமிழ்த்தி என்னை உதைத்தார்.

தலையில் இருந்து இரத்தம் வழிந்தது. வயல் தண்ணீரை வயிறு முட்ட குடித்துவிட்டேன். பின்னர் நான் மயங்கி விட்டேன்.

மயக்கம் தெளிந்து எழுந்து பார்த்ததும் சீருடையினரைக் காணவில்லை மெல்ல மெல்ல எழுந்து றோட்டுக்கு வந்து "ஆமிக்காரங்கள் அடித்துப் போட்டாங்கள்" என்று சொன்னேன். அங்கு நின்ற பொதுமக்கள் ஒருவாறு என்னை ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அதன் பின்னர் யாழ் வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டேன். —இப்படி அவர் கூறினார்.

## சமஷ்டியோ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றுக் கொள்ள தமிழ்க் குழுக்கள் மறுக்கின்றன.

தீவிரவாதிகளும் எம்முடன் இணைந்து நாட்டை ஆளலாம். அவர்கள் அதிகாரங்களுடன் [illegible] ராட்சி மன்றங்களை ஏற்றுக் கொள்ள முதலில் இணங்க வேண்டும்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் சுதந்திர ஆட்சி அமைக்க வேண்டும் என்று தீவிரவாதிகள் போராடுகிறார்கள். இதை நாம் எப்படி அனுமதிக்க முடியும்! [illegible] ஜெயவர்த்தன கேட்டார்.

## மார்க்கோஸ் மறுப்பு

மணிலா, பெப். 17

அமெரிக்க ஜனாதிபதியின் விசேஷ தூதுவர் திரு. பிலிப் ஹாபிப் இன்று ஜனாதிபதி திரு. பேர்ட்டினன்ட் மார்க்கோஸையும், திருமதி. அக்கியுனோவையும் தனித் தனியே சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

ஜனாதிபதி தேர்தலில் முறைகேடுகள் நடந்ததாகக் கூறப்படுவதை திரு. மார்க்கோஸ் மறுத்தார்.

நிர்வாகம் கைமாற்றப்படுவது அவசியம் என்று திருமதி. அக்கியுனோ திரு. ஹாபிப்பிடம் எடுத்துரைத்தார்.

## பிரிட்டிஷ்...

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

இளைஞர்கள் தெரிவித்துச் சென்றதாகவும் அறியப்படுகிறது.

நேற்று நண்பகல் விசேஷ விமான மூலம் கொழும்பிலிருந்து வந்த செல்வி சிங்கரும், திரு. மக்கின் ரொட்டும் இன்று (செவ்வாய்) பிற்பகல் 4. 30 மணிக்கு கொழும்பு புறப்படுவார்கள் என அறியப்படுகிறது

திருமதி பெனிலோப் விடுவிக்கப்பட்டாலும் சரி, விடுவிக்கப்படாவிட்டாலும் சரி தாம் திட்டமிட்டுள்ளவாறு கொழும்பு புறப்படுவது பின்போடப்படமாட்டாது என செல்வி சிங்கர் தெரிவித்ததாக அறியப்படுகிறது.

பிரிட்டிஷ் உளவு ஸ்தாபனத்துடன் தொடர்பு இருப்பதாகச் சந்தேகித்து திருமதி. பெனிலோப்பை 'ஈரோஸ்' இயக்கத்தினர் கடந்த மாதம் 18 ஆம் திகதி முல்லைத்தீவில் வைத்துக் கடத்திச் சென்றனர்.

## இனப் பிரச்சினையைத் தீர்க்க தமிழக, மத்திய அரசுகள் உதவ வேண்டும்

### பௌத்த சங்கம் கோரிக்கை

கொழும்பு, பெப். 18

இனப்பிரச்சினையைத் தீர்க்க தமிழ்நாடு அரசும் இந்திய மத்திய அரசும் உதவ வேண்டும்.

அப்படி உதவ முடியவில்லை என்றால், இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையில் தலையிடாது இருக்க வேண்டும்.

இலங்கை பௌத்த சங்கத் தலைவர் திரு. எட்மண்ட் பனகொட மேற்கண்டவாறு சொன்னார்.

தெஹிவளையில் பௌத்த விகாரையில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் இரு. பனகொட மேலும் சொன்னதாவது:

இலங்கைப் பிரஜைகள் மட்டுமே இலங்கையில் வாழ வேண்டும். அப்பொழுது ஒருவரின் தலையீடும் நாட்டில் இருக்க முடியாது அதற்காகவே மலையகத் தமிழருக்கு அரசு குடியுரிமை வழங்கியது.

இதைச் சிலர் கண்டிக்கின்றனர்.

இப்படி திரு பனகொட சொன்னர்.

## 8 மலையக தமிழர் கைது

கொழும்பு, பெப் 18

மலையக வன்செயல் சம்பவங்கள் தொடர்பாக நேற்று 8 மலையகத் தமிழர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

## பன்குடாவெளி சுற்றிவளைப்பு

மட்டக்களப்பு, பெப். 18

மட்டக்களப்பு பன்குடாவெளி கிராமத்தை நேற்று நண்பகல் 12 மணி அளவில் சுற்றிவளைத்த ஆயுதப்படையினர் 35க்கு மேற்பட்டவர்களைக் கைது செய்தனர்.

நவா மினி (உஷா மினி முன்பாக)




MISSING IN ACTION - I, II
10 30, 12 30, 2.30, 4.30, 7.00, 9 30
0 முதன் முதலாக ஒரிஜினல் பிரதியில்
0 (A) கண்டிப்பாக வயது வந்தவர்கட்கு மட்டும்.
0 தடை செய்யப்பட்டது.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: த ஷப்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் வெளியிட்ட திகதி 18 2 1986

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org